**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண். 60/2021**

**2026 ஆம்** வருடம் ஏப்ரல் மாதம் 08 ஆம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியான பி.வா.சா.1-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வெங்கடேஷ் பிரபு | ஜாதி | : | |
| த.பெ | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : | இந்திய ராணுவம் |
| கிராமம் | : | அய்யம்பாளையம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 44 /2026 |
| தேதி | : | 08.04.2026 | | | |

வாதி தரப்பு குறுக்கு **விசாரணை தொடர்ச்சி**

இவ்வழக்கின் வாதிகள் நிலக்கோட்டை மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அசல் வழக்குஎண். 175/2015 என்ற வழக்கை அய்யம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர், DRO, RDO, தாசில்தார், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்திற்கு மாறுதலாகி அசல் வழக்கு எண்.61/2021 என்று மறு எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன அசல் வழக்குஎண். 175/2015 ல் உங்களை ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று நீங்கள் தாக்கல் செய்த இடைக்கால மனு எண்.183/2016 என்ற மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து நீங்கள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP No.2296/2017 என்ற மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அரசு தரப்பிற்கு உறுதுணையாக இருந்து வழக்கை நடத்திக்கொள்ளலாம் என்று உத்தரவாகியுள்ளது. உங்களிடம் காண்பிக்கப்படும் இந்த உத்தரவு தான் மேற்சொன்ன CRP No.2296/2017 என்ற மனு தள்ளுபடி செய்ததற்காக உத்தரவு என்றால் சரிதான். CRP No.2296/2017 மனுவின் உத்தரவு **(வா.சா.ஆ.7/DW.1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

இந்த நீதிமன்றத்தில் நடந்த அசல் வழக்கு எண்.61/2021 ல் உங்களது தாயார் வைரம் என்பவரை ஒரு தரப்பினராக சேர்க்க சொல்லி நீங்கள் தாக்கல் செய்த இடைக்கால மனு எண்.1/2023 இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் தாயார் தாக்கல் செய்த மேற்சொன்ன மனு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும், அந்த தள்ளுபடி உத்தரவை எதிர்த்து உங்கள் தாயார் இதுவரை எந்த மேல்முறையீடும் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.61/2021 வழக்கு முழு விசாரணைக்கு பிறகு பகுதியாக வழக்கு

அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.61/2021 ல் சொல்லப்பட்டிருந்த வழக்கு சொத்தும், இந்த வழக்கின் வழக்கு சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.61/2021 ல் பிரதிவாதிகளான அய்யம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர், DRO, RDO, தாசில்தார், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்தில் உங்களுக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு ஆத்தூர் வட்டாச்சியரால் 2ம் வாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு 1ம் வாதி பெயரில் வீட்டு வரி ரசீது மற்றும் குடிநீர் வரி ரசீது ஆகியவை அய்யம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். நீங்கள் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் 2ம் வாதி பெயரில் உள்ள மேற்சொன்ன பட்டா வட்டாச்சியரால் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வருவாய் கோட்டாச்சியரால் ரத்து செய்யப்பட்டது. பட்டா ரத்து செய்யப்பட்ட பின்பு மேற்சொன்ன பேரூராட்சி செயல் அலுவலர் தாவா சொத்தில் 1 வாதி பெயரில் வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது மற்றும் குடிநீர் வரி ரசீது ஆகியவற்றை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். 2ம் வாதி பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்ததை எதிர்த்தும், 1ம் வாதி பெயரில் தாவா சொத்தின் வீட்டிற்கு கொடுத்த சொத்து வரி, குடிநீர் கட்டண ரசீது ஆகியவற்றை ரத்து செய்ததை எதிர்த்து தான் அசல் வழக்கு எண்.61/2021 என்ற மேற்சொன்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2014 ம் வருடம் அய்யம்பாளையம் பேரூராட்சி செயல்அலுவலர் குடிநீர் குழாய் இணைப்பை துண்டித்தபோது உங்கள் அப்பா K.K. பாலன் என்பவர் பெயரில் இருந்த குடிநீர் இணைப்பையும் துண்டித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் தாயார் வைரம் 2001 முதல் 2006 வரை அய்யம்பாளைளயம் பேரூராட்சியில் துணை தலைவராக இருந்தார் என்றால் சரிதான். உங்களது தாயார் வைரம் அய்யம்பாளையம் பேரூராட்சியில் இருந்த செல்வாக்கை பயன்படுத்தி 1ம் வாதி பெயரில் இருந்த வீட்டு வரி ரசீது மற்றும் குடிநீர் குழாய் ரசீது ஆகியவற்றை ரத்து செய்தீர்கள் என்றும், குடிநீர் குழாய் இணைப்பை துண்டித்தார்கள் என்றால் சரியல்ல. குடிநீர் குழாய் இணைப்பு 2015-2016 ல் துண்டிக்கப்பட்டது.

2015 ம் வருடம் 1ம் வாதியின் தகப்பனார் சடையாண்டி பாப்புரெட்டி என்பவர் உங்கள் மீது பட்டிவீரன்பட்டி காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகார் குற்ற எண்.13/2015 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது அதில் நடவடிக்கை இல்லாததால் அந்த புகார் தொடர்பாக தனி நபர் குற்ற முறையீட்டு வழக்கை நிலக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC No.290/2016 என்ற வழக்கை உங்கள் மீது தாக்கல் செய்து அதில் நீங்கள் ஆஜரானீர்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது புகார்தாரர் சடையாண்டி பாப்பிரெட்டி என்பவர் இறந்த காரணத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் வாதி உங்கள் மீது பட்டிவீரன்பட்டி காவல்நிலையத்தில் அவர் வீட்டை பார்த்து

நீங்கள் CCTV camera க்கள் பொருத்தியுள்ளதாக புகார் கொடுத்து அந்த புகார் குற்ற எண்.54/2020 என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். Mistake of fact என்ற காரணத்தினால் அந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டது. நீங்கள் சொல்வது போல் அந்த வழக்கு Mistake of fact என்ற காரணத்தினால் முடியவில்லை என்றும், இன்று வரை நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் உங்கள் தம்பி சரவணன் இடையூறு செய்தார் என்று பட்டிவீரன்பட்டி காவல்நிலையத்தில் 1ம் வாதி 25.12.2025 அன்று புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகாரில் உங்கள் சகோதரர் ஆஜராகி இடையூறு செய்யமாட்டேன் என்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. வாதிக்கு தாவா சொத்தில் உள்ள மரத்தை வெட்டியதற்காக அபராதம் விதிக்கவில்லை என்றும், தாவா சொத்திற்கு வெளியில் இருந்த புறம்போக்கு இடத்தில் இருந்த மரத்தை வெட்டியதற்காக தான் அபராதம் விதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த மரம் வெட்டியது தொடர்பாக நீங்கள் தான் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தீர்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் உங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், வாதிகளுக்கும் உங்களுக்கும் வேறு நிலப்பிரச்சனை தொடர்பாக வழக்கு நிலுவையில் இருப்பதாலும், நீங்கள் ராணுவத்தில் வேலை பார்ப்பதாலும், உங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பொய்யாக புகார் கொடுத்து வாதிகளை வீண் அலைக்கழிப்பிற்கு உள்ளாக்குகிறீர்கள் என்றால் சரியல்ல. அரசு நிலம் காப்பாற்றப்பட்ட வேண்டும் என்பதற்காக தான் அந்த புகாரை நான் நாட்டின் குடிமகன் என்ற முறையில் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு புகார் கொடுத்தேன். இது போன்று வேறு நபர்கள் மீதும் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் கொடுத்துள்ளேன். நீங்கள் சொல்வது போல் வேறு யார் பெயரிலும் இது போன்று புகார் கொடுக்கவில்லை என்றும், வாதிகளின் மீது மட்டும் தான் நீங்கள் புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**

District Munsif cum Judicial Magistrate

Athoor